மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.07/2023
அ.வ.எண்.292/2014

1. துரைசாமி
2. செம்பாயி (இறந்தவர்)
3. பூபதி
4. கோபாலன்
5. ராதா
6. முருகேசன்
7. தமிழ்செல்வன்
8. ராஜேஸ்வரி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மாரியப்பன்
2. கலா ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 31.01.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பீட்டர்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.G.மாலதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக பி.வா.சா.1ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுவின் சுருக்கம் : –

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் விளைவுறு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு

தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ள நிலையில், கடந்த 20.10.2023ம் தேதியில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த போது, மனுதாரர்களின் வழக்கறிஞர் வேறொரு நீதிமன்றத்தில் இருந்ததால் வழக்கறிஞரால் ஆஜராக இயலவில்லை. ஆதலால் கடந்த 20.10.2023ம் தேதியன்று வாதிகள் தரப்பில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. எனவே பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக பி.வா.சா.1ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது, மோசடியானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஏற்புடையதல்ல. கடந்த 20.10.2023ம் தேதியன்று பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது என்பது உண்மை. ஆனால் மனுதாரர்களின் வழக்கறிஞர் வேறொரு நீதிமன்றத்தில் இருந்ததால் வழக்கறிஞரால் ஆஜராக இயலவில்லை என்பதும், எனவே கடந்த 20.10.2023ம் தேதியன்று வாதிகள் தரப்பில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது என்பது பொய்யாகும். கடந்த 20.07.2022ம் தேதியில் பி.வா.சா.1ன் முதல் விசாரணை நடைபெற்று, 18.08.2022, 20.09.2023, 20.10.2023 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டும், பலமுறை வாய்ப்புகள் வழங்கப்பட்ட பின்பு தான் பி.வா.சா.1ன் சாட்சியம் முடிக்கப்பட்டது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியத்தை 12.03.2021 முதல் 28.03.2023 வரை இரண்டு ஆண்டுகளாக வழக்கை இழுத்தடிப்பதற்காக காலதாமதப்படுத்தி வந்துள்ளனர். எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு:–

(i) மனுதாரர்கள் தரப்பில் கடந்த 20.10.2023ம் தேதியில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த போது, மனுதாரர்களின் வழக்கறிஞர் வேறொரு நீதிமன்றத்தில் இருந்ததால் வழக்கறிஞரால் ஆஜராக இயலவில்லை என்றும், ஆதலால் கடந்த 20.10.2023ம் தேதியன்று வாதிகள் தரப்பில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது என்றும், எனவே பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக பி.வா.சா.1ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 20.10.2023ம் தேதியன்று பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது என்பது உண்மை என்றும், ஆனால் மனுதாரர்களின் வழக்கறிஞர் வேறொரு நீதிமன்றத்தில் இருந்ததால் வழக்கறிஞரால் ஆஜராக இயலவில்லை என்பதும், எனவே கடந்த 20.10.2023ம் தேதியன்று வாதிகள் தரப்பில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது என்பது பொய் என்றும், கடந்த 20.07.2022ம் தேதியில் பி.வா.சா.1ன் முதல் விசாரணை நடைபெற்று, 18.08.2022, 20.09.2023, 20.10.2023 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டும், பலமுறை வாய்ப்புகள் வழங்கப்பட்ட பின்பு தான் பி.வா.சா.1ன் சாட்சியம் முடிக்கப்பட்டது என்றும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியத்தை 12.03.2021 முதல் 28.03.2023 வரை இரண்டு ஆண்டுகளாக வழக்கை இழுத்தடிப்பதற்காக காலதாமதப்படுத்தி வந்துள்ளனர் என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்குரையை பரிசீலனை செய்ததில் விளம்புகை மற்றும் விளைவுறு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு, கடந்த 20.10.2023ம் தேதியில் பி.வா.சா.1ன் குறுக்கு

விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த போது, மனுதாரர்கள்/வாதிகளின் வழக்கறிஞர் வேறொரு நீதிமன்றத்தில் இருந்ததால், மனுதாரர்கள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாததால் மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணைக்கான வாய்ப்பு இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் மேற்படி பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி முடிக்கப்பட்ட மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணையை மீண்டும் திறக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் தரப்பில் விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையிலும், வழக்கறிஞரின் இயலாமையால் தரப்பினர் பாதிக்கப்படலாகாது என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலும், பி.வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், பி.வா.சா.1 ன் சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்வதால் எதிர்மனுதாரர்களின் நலனுக்கு எவ்வித பாதகமான சூழலும் ஏற்படாது என்பதை கருத்தில் கொண்டு, முடிக்கப்பட்ட பி.வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் இவ்வழக்கு 9 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளதை கருத்தில் கொள்கையிலும், மனுதாரர்களால், எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2000/– செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2000/–செலவுத்தொகையாக 29.02.2024 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 29.02.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம்

ஆண்டு  பிப்ரவரி மாதம் 21ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.02.21 16:44:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.02.21 16:44:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.